www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




# தமிழ்

# QUESTION BANK

# &

# PASS BOOK

# X






VMG

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வகுப்பு - 10 தமிழ் வினாவங்கி 21.10.2024

என் மதிப்பும், மதிப்பெண்ணும் என் பேனா முனையில் ... ...



... ... ... வழிகாட்டி வழி

படிக்கலாம் வாருங்கள்!

அ) 01. மனப்பாடப்பகுதி

| | | |
|---|---|---|
| இயல் 1 | அழகார்ந்த செந்தமிழே! | - பெருஞ்சித்திரனார் |
| இயல் 2 | முல்லைப்பாட்டு | - நப்பூதனார் |
| இயல் 3 | காசிக்காண்டம் | - அதிவீரராம பாண்டியர் |
| இயல் 4 | பெருமாள் திருமொழி | - குலசேகராழ்வார் |
| இயல் 5 | நீதிவெண்பா | - செய்குதம்பிப் பாவலர் |
| இயல் 6 | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | - குமரகுருபரர் |
| இயல் 6 | கம்பராமாயணம் | - கம்பர் |
| இயல் 7 | சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| இயல் 8 | காலக்கணிதம் | - கண்ணதாசன் |
| இயல் 9 | தேம்பாவணி | - வீரமாமுனிவர் |
| இயல் 3, 6 | திருக்குறள் | - திருவள்ளுவர் |

02. திருக்குறளில் பயின்று வரும் அணிகள்

ஆ) 01 செய்யுள் உரைநடை சார்ந்த ஒரு மதிப்பெண் வினாக்கள்

02. ஒரு சில குறுவினாக்கள்

இ) இலக்கணம்

**(i)** எளிய வழியில் இலக்கணக்குறிப்பு கண்டறியும் வழி முறைகள்

**(ii)** பகுபத உறுப்பிலக்கணம்

ஈ) இலக்கண வினாக்கள்

உ) சொல்லும் பொருளும்

ஊ) கலைச்சொல்

எ) மொழிபெயர்ப்பு

ஏ) இலக்கிய நயம் பாராட்டுக

ஐ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

**குறிப்பு - **மற்ற வினாக்களை தமிழ்ப்பாடப் புத்தகத்தில் படிக்க வேண்டும்.**

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வகுப்பு - 10 தமிழ் 12.10.24

**தமிழ் பாடப்புத்தகத்தின் துணையோடு கற்கவும்**
**செய்யுள், உரைநடை, இலக்கணம் சார்ந்த சிறுகுறிப்பேடு**
**செய்யுள் - மனப்பாடப்பகுதி (3 + 2 மதிப்பெண்)**

**இயல் 1 அழகார்ந்த செந்தமிழே!**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

- **பெருஞ்சித்திரனார்**

**இயல் 2 முல்லைப்பாட்டு**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

- **நப்பூதனார்**

**இயல் 3 காசிக்காண்டம் (விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள் - 9)**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருகஎன உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
புரிந்துநன் முகமன் வழங்கல் **இவ்வொன்பான்**
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

- **அதிவீரராம பாண்டியர்**

**இயல் 4 பெருமாள் திருமொழி**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே

- **குலசேகராழ்வார்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இயல் 5 நீதிவெண்பா**

**அரு**ளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
**மரு**ளை அகற்றி மதிக்கும் தெருளை
**அரு**த்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
**பொரு**த்துவதும் கல்வியென்றே போற்று.

**- செய்குதம்பிப் பாவலர்**

**இயல் 6 முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்**

**செம்**பொ னடிச்சிறு கிங்கிணியோடு சிலம்பு **கலந்தாட**
திருவரை யரைஞா ணரைமணி யொருமொளி திகழரை **வடமாடப்**
**பைம்**பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி **சரிந்தாடப்**
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி **பதிந்தாடக்**
**கம்**பி விதம்பொதி குண்டல முங்குழை காது **மசைந்தாடக்**
கட்டிய சூழியுமுச்சியு முச்சிக் கதிர்முத் **தொடுமாட**
**வம்**பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக **செங்கீரை**
ஆதி வைத்திய நாதபுரிக்குக னாடுக **செங்கீரை.**

**- குமரகுருபரர்**

**இயல் 6 கம்பராமாயணம்**

**வெய்யோ**னொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
**பொய்யோ**வெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
**மையோ**மர கதமோமறி கடலோமழை முகிலோ
**ஐயோ**விவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.

**- கம்பர்**

**இயல் 7 சிலப்பதிகாரம்**

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் கவிந்த கூல வீதியும்;

**- இளங்கோவடிகள்**

**இயல் 8 காலக்கணிதம்**

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது!
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்! - **கண்ணதாசன்**

**இயல் 9 தேம்பாவணி**

**நவமணி** வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
**தவமணி** மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
**துவமணி** மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
**உவமணி** கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.
- **வீரமாமுனிவர்**

**திருக்குறள் - திருவள்ளுவர்**

01. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது **அறிவு.**

02. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

03. **பண்**என்னாம் பாடற் கியைபின்றேல் **கண்**என்னாம்
**கண்**ணோட்டம் இல்லாத **கண்**

04. **அருமை** உடைத்தென் றசாவாமை வேண்டும்
**பெருமை** முயற்சி **தரும்**

05. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி **விடும்.**

06. **செயற்கை** அறிந்தக் கடைத்தும் உலகத்
**தியற்கை** அறிந்து **செயல்**

07. **பொருளல்ல** வரைப் பொருளாகச் செய்யும்
**பொருளல்ல** தில்லை **பொருள்.**

08. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் **வினை.** **உவமை அணி**

09. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் **உலகு.**

10. **இன்மையின்** இன்னாத தியாதெனின் இன்மையின்
**இன்மையே** இன்னா **தது.** **சொற்பொருள் பின்வருநிலை அணி**

www.Padasalai.Net

**திருக்குறளில் பயின்று வரும் அணிகள்** (3 மதிப்பெண்)

1. வேலொடு நின்றான் இடுவென் றது**போலும்**
   கோலொடு நின்றான் இரவு. **உவமையணி**

2. **நச்சப்** படாதவன் செல்வம் நடுஊருள்
   **நச்சு** மரம்பழுத் **தற்று.** (அற்று - உவமஉருபு) **உவமையணி**

3. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
   றுண்டாகச் செய்வான் வினை. (அற்று - உவமஉருபு) **உவமை அணி**

4. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்பு**போல்**
   கொல்லப் பயன்படும் கீழ். **உவமை அணி**

5. **பண்**என்னாம் பாடற் கியைபின்றேல் **கண்**என்னாம்
   **கண்**ணோட்டம் இல்லாத **கண்** **எடுத்துக்காட்டு உவமையணி**

6. **பொருளல்ல** வரைப் பொருளாகச் செய்யும்
   **பொருளல்ல** தில்லை பொருள். **சொல் பின்வருநிலை அணி**

7. **இன்மையின்** இன்னாத தியாதெனின் இன்மையின்
   **இன்மையே** இன்னா தது. **சொற்பொருள் பின்வருநிலை அணி**

8. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
   மேவன செய்தொழுக லான். **வஞ்சப் புகழ்ச்சி அணி**

**செய்யுள், உரைநடை சார்ந்த ஒரு மதிப்பெண் வினாக்கள்**

**இயல் - 1**

01. மெத்த வணிகலன் - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது -
   **அ)** வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   **ஆ)** பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   **இ)** ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**02.** <u>"காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்"</u> நிலத்துக்கு நல்ல உரங்கள். -
   இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
   **அ)** இலையும் சருகும் **ஆ)** தோகையும் சண்டும்
   **இ)** தாளும் ஓலையும் **ஈ) சருகும் சண்டும்**

**03.** வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -
   **அ)** குலை வகை **ஆ) மணிவகை** **இ)** கொழுந்து வகை **ஈ)** இலை வகை

**இயல் 2**

01. **செய்தி** 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15-ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
**செய்தி 2** - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
**செய்தி** 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

**அ)** செய்தி 1 மட்டும் சரி **ஆ)** செய்தி 1, 2 ஆகியன சரி
**இ)** செய்தி 3 மட்டும் சரி **ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி**

02 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

**அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்** **ஆ)** கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
**இ)** கடல் நீர் ஒலித்தல் **ஈ)** கடல் நீர் கொந்தளித்தல்

**இயல் 3**

01. **பின்வருவனவற்றுள் முறையான தொடர் -**

**அ)** தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
**ஆ)** தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
**இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு**
**ஈ)** தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

02. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது -

**அ)** புத்தூர் **ஆ)** மூதூர் **இ)** பேரூர் **ஈ) சிற்றூர்**

03. காசிக்காண்டம் என்பது -

**அ)** காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
**ஆ)** காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
**இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**
**ஈ)** காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

04. 'விருந்தினரைப் பேணுதற்குப் பொருள் தேவைப்பட்டதால, தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை -

**அ)** நிலத்திற்கேற்ற விருந்து **ஆ) இன்மையிலும் விருந்து**
**இ)** அல்லிலும் விருந்து **ஈ)** உற்றாரின் விருந்து

05. **விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.**

1) இறகு (பறவையிடம் இருப்பது) 2) அ**க்**கா (தங்கைக்கு மூத்தவள்)
3) குருதி (சிவப்பு நிறத்தில் இருக்கும்) 4) ம**தி** (அறிவின் மறுபெயர்)
5) வா**ள்** (மன்னரிடம் இருப்பது) 6) பட**கு** (நீரில் செல்வது)

**06.** இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
சிலை சீலை தொடு - தோடு மடு - மாடு மலை - மாலை வளி - வாளி
விடு - வீடு

**07.** **நச்சப் படாதவன்** செல்வம் - இத்தொடரில் தடித்த சொல்லுக்குப் பொருள் தருக.
**நச்சப் படாதவன்** - ஏழை எளியவர்க்கு கொடுத்து உதவாதவன்

**08.** **இறடிப் பொம்மல் பெறுகுவிர்** - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
தினைச் சோற்றை அவர் உமக்குத் தரப்பெறுவீர் என்பது பொருள்.

**இயல் 4**

**01.** ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ - யார் யாரிடம் கூறியது?
**அ)** குலசேகர ஆழ்வாரிடம் இறைவன் **ஆ) இறைவனிடம் குலசேகர ஆழ்வார்**
**இ)** மருத்துவரிடம் நோயாளி **ஈ)** நோயாளியிடம் மருத்துவர்

**02.** தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
**தலைப்பு** : செயற்கை நுண்ணறிவு
**குறிப்புகள்** : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.
**அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.**
**ஆ)** குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
**இ)** தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
**ஈ)** குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**03.** பரிபாடல் அடியில் **விசும்பும் இசையும்** என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
**அ)** வானத்தையும் பாட்டையும் **ஆ)** வானத்தையும் புகழையும்
**இ)** வானத்தையும் பூமியையும் **ஈ) வானத்தையும் பேரொலியையும்**

**04.** பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
**அ)** துலா **ஆ)** சீலா **இ)** குலா **ஈ) இலா**

**இயல் 5**

**01.** ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்’ என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி -
**அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.**
**ஆ)** காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
**இ)** பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
**ஈ)** சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

**02.** ‘அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை’ - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
**அ)** தமிழ் **ஆ)** அறிவியல் **இ) கல்வி** **ஈ)** இலக்கியம்

www.Padasalai.Net

**03.** இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர்______ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ______

**அ)** அமைச்சர், மன்னன் **ஆ)** அமைச்சர், இறைவன்

**இ)** இறைவன், மன்னன் **ஈ)** **மன்னன், இறைவன்**

## இயல் 6

**01.** **கூற்று 1** : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்

**கூற்று 2** : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.

**அ)** கூற்று 1 சரி, 2 தவறு **ஆ)** கூற்று 1 மற்றும் 2 தவறு

**இ)** கூற்று 1 தவறு 2 சரி **ஈ)** **கூற்று 1 மற்றும் 2 சரி**

**02.** மலர்கள் தரையில் நழுவும், எப்போது?

**அ)** அள்ளி முகர்ந்தால் **ஆ)** **தளரப் பிணைத்தால்**

**இ)** இறுக்கி முடிச்சிட்டால் **ஈ)** காம்பு முறிந்தால்

**03.** தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டுவிழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது - இத்தொடருக்கான வினா எது?

**அ)** தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?

**ஆ)** **கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?**

**இ)** தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?

**ஈ)** யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

**04.** கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

**அ)** நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

**ஆ)** ஊரில் விளைச்சல் இல்லாததால்

**இ)** அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

**ஈ)** **அங்கு வறுமை இல்லாததால்**

**05 தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் **கருக்கத்** தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது.** .
3. **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சைப்** புல்வெளிகளில் கதிரவனின் **மஞ்சள்** வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடலில் **கருத்துவிடும்.**

**06. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, பார்ப்பவர், விருது, தோற்பவர், கவிழும், விருந்து

1. விரட்டாதீர்கள் - பறவைக்கு மரம் - **வீடு**
   வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் - **மரவீடு**

2. காலை ஒளியினில் மலரிதழ் - **அவிழும்**
   சோலைப் பூவினில் வண்டினம் - **கவிழும்**

3. மலைமுகட்டில் மேகம் **தங்கும்** அதைப்
   பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**

4. வாழ்க்கையில் **தோற்பவர்** மீண்டும் வெல்வர் - இதைத்
   தத்துவமாய்ப் **பார்ப்பவர்** முயற்சி மேற்கொள்வர்.

5. கைதட்டலே கவிஞர்க்கு **விருது** அவையோரின்
   ஆர்வமே அவருக்கு **விருந்து**

**இயல் 7**

**01.** 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -
**அ) திருப்பதியும் திருத்தணியும்** **ஆ)** திருத்தணியும் திருப்பதியும்
**இ)** திருப்பதியும் திருச்செந்தூரும் **ஈ)** திருப்பரங்குன்றமும் பழனியும்

**02.** 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
**அ)** மேம்பட்ட திருவாசகத்திறன் பெற்றவர் **ஆ)** மிகுந்த செல்வம் உடையவர்
**இ)** பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் **ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

**03.** தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது -
**அ)** திருக்குறள் **ஆ)** புறநானூறு **இ)** கம்பராமாயணம் **ஈ) சிலப்பதிகாரம்**

**06. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**
வரப்போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.

1) இன்னும் சிறிது நேரததில் **வரப்போகிறேன்.**
2) நம் நாட்டில் என்ன வளம் **இல்லாமல் இருக்கிறது.**
3) இன்று பொரியலில் உப்பு **கொஞ்சம் அதிகம்.**
4) குற்றவாளி **முன்னுக்குப் பின்னாகப்** பேசினான்.
5) சில நினைவுகளை **மறக்க நினைக்கிறேன்.**

## இயல் 8

01. மேன்மை தரும் அறம் என்பது __________

**அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது**

**ஆ)** மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

**இ)** புகழ் கருதி அறம் செய்வது

**ஈ)** பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

02. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

**அ)** உதியன் சேரலாதன் **ஆ) அதியன் பெருஞ்சாத்தன்**

**இ)** பேகன் கிள்ளிவளவன் **ஈ)** நெடுஞ்செழியன் திருமுடிக்காரி

03. ‘வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்’ இவ்வடி குறிப்பிடுவது

**அ)** காலம் மாறுவதை **ஆ)** வீட்டைத் துடைப்பதை

**இ) இடையறாது அறப்பணி செய்தலை** **ஈ)** வண்ணம் பூசுவதை

04. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்

**அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**

**ஆ)** என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

**இ)** இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

**ஈ)** என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

05. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்

**அ) அகவற்பா** **ஆ)** வெண்பா **இ)** வஞ்சிப்பா **ஈ)** கலிப்பா

## இயல் 9

01. ‘பிரிந்தன புள்ளின் <u>கானில்</u>
பெரிதழுது இரங்கித் தேம்ப -
பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.

**அ)** கிளை , துளை **ஆ)** நிலம், வாட **இ) காடு, வாட** **ஈ)** காடு, நிலம்

02. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயபாந்தன் கருதுவது

**அ)** அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்

**ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**

**இ)** அறிவியல் முன்னேற்றம்

**ஈ)** வெளிநாட்டு முதவீடுகள்

03. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று __________ வேண்டினார்.

**அ) கருணையன், எலிசபெத்துக்காக**

**ஆ)** எலிசபெத், தமக்காக

**இ)** கருணையன், பூக்களுக்காக

**ஈ)** எலிசபெத் பூமிக்காக

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**04.** கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது:

**அ)** தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

**ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**

**இ)** அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

**ஈ)** அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

## ஒரு சில குறுவினாக்கள்

### இயல் 1

01. 'மன்னும் சிலம்பே! மணிமேக கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

**விடை** - சிலப்பதிகாரம் மணிமேகலை தவிர எஞ்சியுள்ளவை,
1. சீவகசிந்தாமணி 2. வளையாபதி 3. குண்டலகேசி

02. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

**சரியான தொடர்கள்:**

ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர்** - ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழைக்கான காரணம்** - தாற்றில் இருப்பன சீப்புகள்; சீப்புகளில் இருப்பன வாழைப்பழங்கள். எனவே, ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன - என்ற தொடர் தவறானது.

### இயல் 2

01. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

1. **மரங்களை நடுவோம்; வளி, நீர் காப்போம்!**
2. **கண்டவற்றை எரிக்காதே; காற்றினை மாசுபடுத்தாதே!**

### இயல் 5

01. 'கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்'
- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

விடை - கழிந்த பெரும் கேள்வியினான் - **மன்னன் குலேச பாண்டியன்**
காதல்மிகு கேண்மையினான் - **புலவர் இடைக்காடர்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**02.** முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டுக.

- முயற்சி திருவினை ஆக்கும் என்னும் குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோள் **ஆற்றுநீர்ப் பொருள்கோள்.**
- குறளின் தொடக்கம் முதல் இறுதிவரை **ஆற்றுநீர் தொடர்ந்து செல்வது போல்**, பொருள் கொள்ளுமாறு அமைந்தமையால் ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆயிற்று.

**இயல் 6**

**01.** உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

- கும்பகருணனே எழுந்திரு, உடனே எழுந்திரு.
- வில்லேந்திய எமதூதர்களின் கையிலே இனிப் படுத்து உறங்குவாயாக! உறங்குவாயாக! என்று கூறி எழுப்புகிறார்கள்!

**02.** கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.
**விடை** - தம்மிடம் உள்ளதை மறைத்தலாகிய நோய் இல்லாதவர்

**03.** பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

- உழைத்ததால் கிடைத்த ஊதியமே கூரான ஆயுதம் என செந்நாப்போதார் கூறுகிறார்.
- ஏனெனில் ஒருவருடைய பகைவரை வெல்லும் கூரான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

**இயல் 7**

**01.** பாசவர், வாசவர், பல்நிண விலைஞர் உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

- **பா**சவர் - வெற்றிலை விற்போர்
- **வாசவர்** - ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள்கள் விற்போர்
- பல்நிண விலைஞர் - பலவகையான இறைச்சிகளை விற்போர்
- உமணர் - உப்பு விற்போர்

**02.** மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்; அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள். இவ்வழக்கம், சோழர் காலத்தில் **மெய்க்கீர்த்தி** எனப் பெயர் பெற்றது. பல்லவர் கல்வெட்டுகள், பாண்டியர் செப்பேடுகள் ஆகியவற்றை சான்றாகக் கூறலாம்.

**03.** 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**இடம் :** ம.பொ.சி அவர்களின் **சிற்றகல் ஒளி** என்னும் உரைநடைப்பகுதியிலட இத்தொடர் இடம்பெற்றுள்ளது. ஆந்திர மாநிலத்திற்குச் **சென்னை**தான் தலைநகராக இருக்க வேண்டுமென்று ஆந்திரர்கள் முழங்கியபோது, ம.பொ.சி கூறியது இது.

**விளக்கம் :** தமிழகத்தோடு இருந்த ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட்டது. அப்போது **சென்னை** அதன் தலைநகரமாக இருக்க வேண்டுமென்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அதற்கு நீதிபதி வாஞ்சு தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. வேதனையுற்ற ம.பொ.சி மாநகரத்தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அதில், **'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'** என முழங்கினார். பின்னர் பிரதமர் நேரு, 'சென்னை தமிழருக்கே' என்பதை உறுதிப்படுத்தினார்.

**04.** 'பகர்வார் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்'

**அ)** இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது? **சிலப்பதிகாரம்**

**ஆ)** பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக — **ப**கர்வார், **ப**ட்டினும்

**இ)** எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக — ப**க**ர்வார், ந**க**ரவீதியும் - **சீர் எதுகை**; ப**ட்**டினும், க**ட்**டு - **அடி எதுகை**

**ஈ)** காருகர் - பொருள் தருக — **நெய்பவர்**

**உ)** இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை? **சந்தனம், அகில்**

**இயல் 8**

**01. அவையம்** - குறிப்பு வரைக.

- அறம் கூறும் மன்றம் அவையம் எனப்படும்
- இது அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தது.
- **'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்'** என்கிறது புறநானூறு.
- மதுரையில் இருந்த அவையம் பற்றி **மதுரைக்காஞ்சி** குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் **துலாக்கோல் போல நடுநிலை மிக்கது** என்கிறது.

**இயல் 9**

**01.** 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வுாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

- **செல்வம், பதவியால்** சிலருக்கு வாழ்வில் தலைக்கனம் ஏற்படும்; செருக்கித் திரிவர்.
- **சித்தாளுக்குச் செங்கற்களின் கனத்தைத்** தலையில் தாங்கினால்தான் வாழ்வு என்று **தலைக்கனம்** என்ற சொல்லுக்கு இரு பொருள் தருகிறார் ஆசிரியர்.

**02.** ‘சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது’ - **இடஞ்சுட்டிப் பொருள் தருக.**

**இடம் :** நாகூர் ரூமி எழுதிய **சித்தாளு** என்னும் கவிதையில் இடம்பெற்ற அடி இது.

**விளக்கம் :** கட்டட வேலை செய்யும்போது எதிர்பாராமல் **சித்தாள்** இறக்க நேரிட்டால் அது பிறர் உள்ளங்களிலே பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்திவிடாது. காரணம் அவள் சாதாரண கூலித்தொழிலாளி. அவள் மனத்திலுள்ள சுமைகள் எத்தகையன என்பதை அவள் சுமந்த செங்கற்கள் அறியா. அஃதாவது செங்கற்கள் போன்ற கடின இதயம் கொண்ட, கருணை சிறிதளவும் இல்லாத முதலாளிகளால் எவ்வாறு அறிய இயலும் என்கிறார் ஆசிரியர்.

**03.** ‘காய்மணி யாகுமுன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்’ - உவமை உணர்த்தும் கருத்து யாது?

- வயலில் விதைத்த நெல் நன்கு பயிராகி, நெல்மணிகள் காணும் முன் மழையின்றிக் காய்ந்து கருகியது - **உவமை**
- அதுபோலத் தாம் தாயை இழந்து வாடித் துன்பப்படுவதாய்க் கருணையர் கூறுகிறார்.

## இலக்கணம்

**எளிய வழியில் இலக்கணக் குறிப்பு கண்டறியும் முறைகள்:**

**01. அடுக்குத்தொடர் :**

- ஒரு சொல் இரண்டு முதல் நான்கு முறைகள் அடுக்கி வரும்.
- பிரித்தால் பொருள் தரும்.
- விரைவு, மகிழ்ச்சி கோபம், துன்பம், அச்சம் - இவற்றுள் ஒன்றினை உணர்த்தும்.

**1.** எத்தனை எத்தனை **2.** விட்டு விட்டு **3.** எழுது எழுது
4. சிரித்துச் சிரித்து **5.** <u>ஊழ்ஊழ்</u>

**02. வினைத்தொகை -**

- இரு சொற்களாக இணைந்து வரும்.
- முதற்சொல் வினைச்சொல்லாகவும் இரண்டாம் சொல் பெயர்ச்சொல்லாகவும் வரும்.
- இருசொற்களுக்கு இடையில் மூன்று காலங்களும் மறைந்திருக்கும்.

**01.** உறுதுயர் **02.** எழுகதிர் **03.** வளர்வானம் **04.** பயில்தொழில்
**05.** காய்மணி **06.** உய்முறை **07.** செய்முறை

**03. வினைமுற்று :**

- ஒரு வினைச்சொல்லின் கருத்து முழுமை பெற்றால் அது வினைமுற்று எனப்படும்.
- காலம், திணை, எண், இடம், பால் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும்.

**01.** மாற்றுமின் (ஏவல் வினைமுற்று) **02.** பரப்புமின் (ஏவல் வினைமுற்று)

04. **வினையெச்சம்:**

- வினையைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் வினையெச்சமாகும்.
- சொல் பெரும்பாலும் **அ, இ, உ** என்னும் ஓசைகளுள் ஒன்றினால் முடியும்.

**01.** ஏந்**தி,** **02.** வெம்**பி** **03.** எய்**தி** **04.** வெந்**து**

**05. பெயரெச்சம்:**

- பெயரைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் பெயரெச்சம் ஆகும்.
- சொல் **அ** அல்லது **உம்** என்னும் ஒலிகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

**01.** <u>ஆடுங்</u> கிளை

**06. எண்ணும்மை :**

- ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொற்கள் சேர்ந்து வரும்.
- **உம்** வெளிப்படையாக வரும்.

01. நீ**ரும்** நில**மும்**
02. உடம்**பும்** உயி**ரும்**
03. தோரணவீதி**யும்** தோமறு கோட்டி**யும்**
04. பண்**பும்** அன்**பும்**
05. இன**மும்** மொழி**யும்**
06. காடனுக்**கும்** கபிலனுக்**கும்**
07. குண்டல**மும்** குழைகா**தும்**
08. வண்ண**மும்** சுண்ண**மும்**

**07. முற்றும்மை :**

- சொல்லின் பொருள் முழுமையாகத் தொகுக்கப்பட்டிருக்கும்.
- சொல்லின் இறுதியில் **உம்** என்பது வெளிப்படையாக இருக்கும்.

01. கால**மும்** **(ம்+ உ-மு)**

**08 உருவகம்**

- **ஆகிய, என்னும்** - போன்ற சொற்கள் மறைந்து வரும்

01. முத்திக்கனி

**09. பண்புத்தொகை -**

- குணம், நிறம், சுவை, வடிவம், அளவு - இப்பண்புகளுள் ஒன்றைப் பெற்று வரும்.
- முதலில் பண்புச்சொல்லும் அடுத்துப் பெயர்ச்சொல்லும் இணைந்து வரும்.
- பண்புத்தொகை சொற்களைப் பிரிக்கும் போது பெரும்பாலும் முதற்சொல்லின் இறுதியில் **மை விகுதி** வரும்.

01. மூதூர் 02. நன்மொழி 03. செந்தீ

**10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் -**

- முதற்சொல் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் எச்ச வினைச்சொல்லாக இருக்கும்.
- முதற்சொல் பெரும்பாலும் துணையெழுத்துடன் முடியும்.

01. குற்றமிலா 02. சிந்தா மணி 03. அமையா 04. வாரா

**11. தொழிற்பெயர் -**

- தொழிலைக் குறிக்கும்.
- தல், அல், அம், ஐ, கை, மை ... போன்ற விகுதிகளுள் ஒன்றைப் பெற்று வரும்.

01. நிறுத்**தல்** 02. வியத்**தல்** 03. எழு**தல்** 04. உரைத்**தல்**
05. இருத்**தல்** 06. நோக்**கல்** **<-(அல்)->** 07. வுழங்**கல்** 08. செப்**பல்**

**12. ஓரெழுத்து ஒருமொழி -**

- ஓர் எழுத்து தனித்து நின்று பொருள் தருவது ஓரெழுத்து ஒருமொழி ஆகும்.

01. நா

**13. இரண்டாம் வேற்றுமைத்தொகை -**

- **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு பெயர்ச்சொல்லோடு சார்ந்து அதன் பொருளை வேறுபடுத்திக் காட்டும்.

01. பாங்கறிந்து

www.Padasalai.Net

**14. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை -**

- இரு சொற்கள் இணைந்து வரும்.
- அவ்விரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபும் அதன் பொருளை (பயனை) விளக்கும் வேறு சொல்லும் மறைந்து வரும்.

**01.** காய்குலைக்கமுகு **02.** பூக்கொடிவல்லி **03.** முத்துத்தாமம்

**15. மூன்றாம் வேற்றுமைத்தொகை -**

**01.** கைதொழுது

**16. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை**

**01.** கைமுறை

**15. நான்காம் வேற்றுமைத்தொகை -**

- நான்காம் வேற்றுமை உருபு **கு** மறைந்து வரும்.

**01.** செவிகள் உணவான

**17. அன்மொழித்தொகை -**

**பெரிய மீசை சிரித்தார்** - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை யாது?

**அ)** பண்புத்தொகை **ஆ)** உவமைத்தொகை

**இ) அன்மொழித்தொகை** **ஈ)** உம்மைத்தொகை

**18. உரிச்சொல் -**

- சால, உறு, தவ, நனி, கூர், கழி, மா, தட..என்பவை உரிச்சொற்கள்.
- இவற்றுள் ஏதேனும் ஒன்று பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லின் முன் வரும்.

**01.** **தட**க்கை **02.** **உறு**

**19. வினையாலணையும் பெயர்** - வினைச்சொல் பெயரோடு சேர்ந்து பெயர்ப்பொருளைத் தந்தால் அது வினையாலணையும் பெயர் ஆகும்.

**01.** சொன்னோர் **02.** உணர்ந்தோர்

**20. வியங்கோள் வினைமுற்று - க, இய, இயர்** என முடிந்தால் அது வியங்கோள் வினைமுற்று.

**01.** ஆடுக

**21. சொல்லிசை அளபெடை -**

**01.** அசை**இ** **02.** கெழீ**இ**

**22. இன்னிசை அளபெடை**

**01.** கொடுப்ப**தூஉ**ம் **02.** துய்ப்ப**தூஉ**ம்

**23. தொகுத்தல் விகாரம் - காக்கென்று**

**24. இடைக்குறை** - கணீர் (கண்ணீர் என்பதன் இடைக்குறை)

**25. வேற்றுமைத்தொகை** - மெய்முறை

www.Padasalai.Net

## பகுபத உறுப்பிலக்கணம் கண்டறிதல்

- **பகுபத உறுப்புகள்** - பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்
- **பகுதி** - சொல்லின் முதலில் அமையும். சொல்லை பிரிக்க முடியாது.
- **விகுதி** - சொல்லின் இறுதியில் அமையும்.
- **இடைநிலை** - பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும்
- **சந்தி** - பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். சில இடங்களில் இடைநிலைக்கு அடுத்தும் வரும்.
- **சாரியை** - பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.
- **விகாரம்** - எழுத்து மாற்றமே விகாரம் எனப்படும். பகுதி அல்லது சந்தியில் மட்டுமே விகாரம் ஏற்படும்.

**01. பொறித்த** - **பொறி + த் + த் + அ**

**பொறி** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

**02. உரைத்த** - **உரை + த் + த் + அ**

**உரை** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

**03. வருக** - **வா (வரு) + க**

**வா** - பகுதி
**வரு** எனத் திரிந்தது விகாரம்
**க** - வியங்கோள் வினைமுற்று விகுதி

**04. மலைந்து** - **மலை + த் (ந்) + த் + உ**

**மலை** - பகுதி
**த்** - த் சந்தி **ந்** ஆனது விகாரம்
**த்** - த் இறந்தகால இடைநிலை
**உ** - வினையெச்ச விகுதி

**05. பொழிந்து** - **பொழி + த் (ந்) + த் + அ**

**பொழி** - பகுதி
**த்** - த் சந்தி **ந்** ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - அ பெயரெச்ச விகுதி

**06. கிளர்ந்த** - **கிளர் த் (ந்) த் அ**

**கிளர்** - பகுதி
**த்** - த் சந்தி **ந்** ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

**07. தணிந்தது** - **தணி த் (ந்) த் அ து**
**தணி** - பகுதி
**த்** - த் சந்தி **ந்** ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - சாரியை
**து** - படர்க்கை வினைமுற்று விகுதி

**08. பதிந்து** - **பதி த் (ந்) த் உ**
**பதி** - பகுதி
**த்** - த் சந்தி **ந்** ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**உ** - வினையெச்ச விகுதி

**09. மயங்கிய** - **மயங்கு இ(ன்) ய் அ**
**மயங்கு** - பகுதி
**இ (ன்)** - இறந்தகால இடைநிலை; **ன்** புணர்ந்து கெட்டது
**ய்** - உடம்படுமெய்
**அ** - பெயரெச்ச விகுதி

**10. அறியேன்** - **அறி ய் ஆ ஏன்**
**அறி** - பகுதி
**ய்** - சந்தி
**ஆ** - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
**ஏன்** - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**11. ஒலித்து** - **ஒலி த் த் உ**
**ஒலி** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**உ** - வினையெச்ச விகுதி

**இலக்கண வினாக்கள் :**

**சரியான விடை தேர்க**

**இயல் 1**

01. எந்தமிழ்நா - என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -
**அ)** எந்+தமிழ் +நா **ஆ)** எந்த+தமிழ் +நா
**இ) எம் +தமிழ்+நா** **ஈ)** எந்தம் +தமிழ் +நா

02. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
**அ)** பாடிய; கேட்டவர் **ஆ)** பாடல்; பாடிய
**இ)** கேட்டவர்; பாடிய **ஈ) பாடல்; கேட்டவர்**

www.Padasalai.Net

**பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

**இயல் 1**

01. **வேங்கை** என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**தனிமொழி** - வேங்கை

**தொடர்மொழி** - வேம் + கை - வேகும் கை

**பொதுமொழி** - **வேங்கை** என்னும் தனிமொழி, பிரிந்து நின்று, வேகும் கை என்றானது. ஒரு சொல் தனிமொழியாகவும், தொடர்மொழியாகவும் அமைவது பொதுமொழி.

02. **"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்"** - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

உடுப்ப**தூஉ**ம்
உண்ப**தூஉ**ம் ] **இன்னிசை அளபெடைகள்**

**இன்னிசை அளபெடை** - செய்யுளில் ஓசை குறையாதபோதும் இனிய ஓசைக்காகக் குறில் நெடிலாய் மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை.

03. **அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது** - இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.

இக்கூற்றில் தடித்த எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறி**ந்தது** | அறி**தல்** | அறி**யாதது** | அறி**யாமை** |
| புரி**ந்தது** | புரி**தல்** | புரி**யாதது** | புரி**யாமை** |
| தெரி**ந்தது** | தெரி**தல்** | தெரி**யாதது** | தெரி**யாமை** |
| பிற**ந்தது** | பிற**த்தல்** | பிற**வாதது** | பிற**வாமை** |

06. **சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

| **வினா** | **விடை** |
|---|---|
| தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை | தே**ன்**இலே ஊ**றி**ய செந்தமிழின் - சுவை |
| தேரும் சிலப்பதி காறமதை | தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை |
| ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம் | ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் - நிதம் |
| ஓதி யுனர்ந்தின் புருவோமே | ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே |

04. **கீழ்க்காணும் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக. (குவியல், குலை, மந்தை, கட்டு)**

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | **கற்குவியல்** | புல் | புல்**லுக்கட்டு** |
| பழம் | பழ**க்குலை** | ஆடு | **ஆட்டுமந்தை** |

05. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

**அ)** கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கிறவரை** அழைத்து வாருங்கள்.

**ஆ)** ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட நாள் வாழ்வார்.
ஊட்டமிகு உணவு **உண்பவர்** நீண்ட நாள் வாழ்வார்

www.Padasalai.Net

**இ)** நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
நேற்று என்னைச் **சந்தித்தவர்** என் நண்பர்.

**ஈ)** பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்.

**06. தொடர்களில் உள்ள தடித்த சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

**அ)** **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் **புசி**த்தலைப் போல, இன்சொல் இருக்க **வன்சொல்** பேசி **இன்னற்**படுகின்றனர்.
**வையகத்தில்** வாழும் **மனிதருள்** சிலர் **பழமி**ருக்கக் காய் **உண்பதைப்** போல, இன்சொல் இருக்க **கடுஞ்சொல்** பேசி **துன்பப்**படுகின்றனர்.

**ஆ)** வள்ளல் குமணன் **வறுமையால்** வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து** மங்காப் **புகழ்** பெற்றான்.
வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **புரவலனுக்குத்** தனது தலையை **அளித்து** மங்கா **கீர்த்தி** பெற்றான்.

**இ)** நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு அந்நாட்டு மக்கள் மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

**ஈ)** **சோலையில்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.
**பூங்காவில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேன் உ**ண்டன.

**உ)** **பசு** போல் **சாந்தமும், புலி** போல் **தீரமும், யானை** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.
**ஆவினைப்**போல் **அமைதியும், வேங்கை** போல் **வீரமும், களிறு** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**07. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

1. தேன் மழை
2. வான் மழை
3. பூ மழை
4. பூ மணி
5. பொன் விலங்கு
6. தேன் பூ
7. மணிமேகலை
8. பூ விலங்கு
9. மணி விளக்கு
10. செய்தேன்

**08. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.**
**குறிப்புகள்** : 1. குறளின்பம் 2. சுவைக்காத இளநீர் 3. காப்பியச் சுவை 4. மனிதகுல மேன்மை 5. விடுமுறைநாள்

**விடை** :
1. <u>குறளின்பத்தில்</u> திளைக்காத தமிழன் உண்டா?
2. <u>இளநீரைச் சுவைக்காதவர்</u> எவரேனும் உண்டோ?
3. கற்றோர் <u>காப்பியச் சுவை</u> அறியாமல் இருப்பரோ?
4. <u>மனிதகுலம் மேன்மை</u> அடைய எது சிறந்தது?
5. இன்று அரசு பொது <u>விடுமுறை நாளா</u>?

**09.** எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

| வ.எண் | செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1. | நாற்றிசையும் செல்லாத நாடில்லை. | நான்கு | ச |
| 2. | எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| 3. | ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| 4. | நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச உ |
| 5. | ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

**10.** **அ)** தேன் **ஆ)** நூல் **இ)** பை **ஈ)** மலர் **உ)** வா - இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர் மொழிகளாக்குக.

**அ)** தேன் - **தேன்மொழி** **ஆ)** நூல் - **நூல் படி** **இ)** பை - **பை கொடு**
**ஈ)** மலர் - **மலர் வனம்** **உ)** வா - **வா அருகில்**

(மொழி என்றால் சொல் (அ) வார்த்தை என்று பொருள். ஒரு சொல் (அ) வார்த்தை தனித்து நின்று பொருள் தருமாயின் அது **தனிமொழி** எனப்படும். **எ.கா. 1.**படி **2.** நட

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் (சொற்கள்) தொடர்ந்து வந்து பொருள் தருமாயின் அது **தொடர்மொழி** ஆகும். **எ.கா.** நான் படித்தேன். **2.** தென்றல் வீசியது

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருள் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது **பொதுமொழி** ஆகும். **எ.டு தாமரை** - 1. பூ 2. தா **+** மரை - தாவுகின்ற மான் எனவே தாமரை என்னும் சொல் இருபொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழி ஆயிற்று.)

**11.** வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.

**அ)** காண் **ஆ)** சிரி **இ)** படி **ஈ)** தடு (தொழிற்பெயர் விகுதிகள் **தல், அல், மை)**

**அ) காண்** - காணு**தல்**, காண**ல்** **ஆ) சிரி** - சிரிப்பு, சிரித்**தல்**, சிரியா**மை**
**இ) படி** - படியா**மை**, படித்**தல்** **ஈ) தடு** - தடுப்பு, தடுத்**தல்,** தடுக்கா**மை**

**12.** மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும். - **இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

(ஒரு செயல் முற்றுப் பெற்றதைக் குறிப்பது வினைமுற்று)

| **வினைமுற்று** | **தொழிற்பெயர்** | **வினைமுற்று** | **தொழிற்பெயர்** |
|---|---|---|---|
| அழைக்கும் | அழைத்**தல்** | ஏறுவேன் | ஏறு**தல்** |
| அமர்வேன் | அமர்**தல்** | பார்ப்பேன் | பார்த்**தல்** |
| எய்தும் | எய்**தல்** | | |

13. **கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல்** - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

**கட்டு** - முதனிலைத் தொழிற்பெயர்
**சொட்டு** - விகுதி பெறாத தொழிற்பெயர்
**வழிபாடு** - **வழிபடு** என்பதன் முதனிலை திரிந்த தொழிற்பெயர்
**கேடு** - **கெடு** என்பதன் முதனிலை திரிந்த தொழிற்பெயர்
**பாடுதல்** - **தல்** என்னும் விகுதி பெற்ற தொழிற்பெயர்

## இயல் - 2

**(குறிப்பு** - உருபுகள் மறைந்து வருவது தொகைநிலைத் தொடராகும். இது **ஆறு** வகைப்படும். 1. வேற்றுமைத்தொகை 2. வினைத்தொகை 3. பண்புத்தொகை 4. உவமைத்தொகை 5. உம்மைத்தொகை 6. அன்மொழித்தொகை)

01. **தடித்த சொற்களில் உள்ள தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.**

1) **அன்புச்செல்வன்** திறன்பேசியின் **தொடுதிரை**யில் படித்துக் கொண்டிருந்தார்.
2) அனைவருக்கும் **மோர்ப்பானையைத்** திறந்து **மோர் கொடுக்கவும்.**
3) **வெண்டைக்காய்** பொரியல் **மோர்க்குழம்புக்குப்** பொருத்தமாக இருக்கும்.
4) **தங்கமீன்கள் தண்ணீர்த் தொட்டி**யில் விளையாடுகின்றன.

| வ.எண் | அடிக் கோடிட்ட சொல் | தொகைநிலைத் தொடர்கள் |
|---|---|---|
| 1. | அன்புச்செல்வன் | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| 2. | தொடுதிரை<br>மோர்ப்பானை<br><br>மோர் கொடுக்கவும் | வினைத்தொகை<br>இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை<br><br>இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| 3. | வெண்டைக்காய்<br><br>மோரக்குழம்பு | இருபெயரொட்டுப் பண்புத்தொகை<br><br>மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| 4. | தங்கமீன்கள்<br><br>தண்ணீர்த் தொட்டி | உவமைத்தொகை<br><br>இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |

02. ‘உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்’ - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

**அ)** உருவகம், எதுகை **ஆ) மோனை, எதுகை**
**இ)** முரண், இயைபு **ஈ)** உவமை, எதுகை

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**03. பெரிய மீசை சிரித்தார்** - தடித்த சொல்லுக்கான தொகையின் வகை எது?

**அ)** பண்புத்தொகை **ஆ)** உவமைத்தொகை

**இ) அன்மொழித்தொகை** **ஈ)** உம்மைத்தொகை

**04. தண்ணீர் குடி, தயிர்க்குடம்** - ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

1. **தண்ணீர் குடி** - தண்ணீரைக் குடி
   தினசரி மூன்று லிட்டர் தண்ணீர் குடித்தல் அவசியம்.
2. **தயிர்க்குடம்** - தயிரை உடைய குடம்.
   இங்கு தயிரை உடைய குடமும் உள்ளது.

**05. மாஅல்** - பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

**பொருள்** - மாஅல் - திருமால்

**இலக்கணக்குறிப்பு** - செய்யுளிசை அளபெடை

**06.** தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும்வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். **இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.**

| சொல் | தொகைநிலைத் தொடர்களின் வகைகள் | விரித்தல் |
|---|---|---|
| 1. மல்லிகைப் பூ | இருபெயரொட்டுப் பண்புத்தொகை | மல்லிகை ஆகிய பூ |
| 2. வரும் வழி | வினைத்தொகை | வந்த வழி<br>வருகின்ற வழி<br>வரும் வழி |
| 3. ஆடு மாடு | உம்மைத்தொகை | ஆடும் மாடும் |
| 4. தண்ணீர் தொட்டி | இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை | தண்ணீரை உடைய தொட்டி |
| 5. குடிநீர் | நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை | குடிப்பதற்குப் பயன்படும் நீர் |
| 6. சுவர்க்கடிகாரம் | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை | சுவரின்கண் உள்ள கடிகாரம் |
| 7. பூங்கொடி பார்த்தாள் | உவமைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை | பூங்கொடி போன்றவளாகிய பெண் ஒருத்தி பாரத்தாள் |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**07. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்

1. இன்சொல் - பண்புத்தொகை
   **இன்சொல்** பேசுதல் அனைவர்க்கும் அழகு
2. எழுகதிர் - வினைத்தொகை
   விடியலில் தோன்றும் **எழுகதிர்** கண்ணையும் கருத்தையம் கவரும்.
3. கீரிபாம்பு - உம்மைத்தொகை
   **கீரியும் பாம்பும்** ஒன்றுக்கொன்று பகையானவை.
4. பூங்குழல் - அன்மொழித்தொகை
   **பூங்குழலாள்** வந்தாள்
5. மலை வாழ்வார் - வேற்றுமைத்தொகை
   **மலை வாழ்வார்** குறிஞ்சி நில மக்கள் எனப்படுவர்.
6. முத்துப்பல் - உவமைத்தொகை
   சிறுவன் சிரிக்கும்போது அவனது **முத்துப்பல்** வரிசை அழகாக இருந்தது.

## இயல் 3

**01. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து **இறங்கினார் முகமது. அவர் பாடகர்.** பாடல்களைப் **பாடுவதும் கேட்பதும்** அவருக்கு பொழுதுபோக்கு. அவரது அறையில் **கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்** கொண்ட குறுந்தகடுகளை **அடுக்கு அடுக்காக** வைத்திருப்பார்

- **இறங்கினார்** முகமது - வினைமுற்றுத்தொடர்
- **அவர்** பாடகர் - எழுவாய்த்தொடர்
- பாடுவ**தும்** கேட்ப**தும்** - எண்ணும்மைத்தொடர்
- **கேட்ட** பாடல்கள் - பெயரெச்சத்தொடர்
- **கேட்காத** பாடல்கள் - எதிர்மறைப் பெயரெச்சத்தொடர்
- **அடுக்கு அடுக்காக** - அடுக்குத்தொடர்

**02. தடித்த சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.**

| வினா | விடை |
|---|---|
| **பழகப்பழகப்** பாலும் புளிக்கும் - | அடுக்குத்தொடர் - |
| **வடித்த கஞ்சியில்** சேலையை அலசினேன் - | பெயரெச்சத்தொடர் |
| மேடையில் **நன்றாகப் பேசினான்** - | வினையெச்சத்தொடர் |
| **வந்தார் அண்ணன்** - | வினைமுற்றுத்தொடர் |
| அரிய **கவிதைகளின் தொகுப்பு** இது - | வேற்றுமைத்தொடர் |

**03.** அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

**அ) வேற்றுமை உருபு** **ஆ)** எழுவாய்
**இ)** உவம உருபு **ஈ)** உரிச்சொல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

04. **எழுது என்றான்** என்பது விரைவு காரணமாக **எழுது எழுது என்றான்** என அடுக்குத்தொடரானது, **சிரித்துப் பேசினார்** என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?
**விடை - சிரித்துச் சிரித்துப்** பேசினார்.

05. கண்ணே கண்ணுறங்கு! காலையில் நீயெழும்பு! மாமழை பெய்கையிலே!
மாம்பூவே கண்ணுறங்கு! பாடினேன் தாலாட்டு! ஆடிஆடி ஓய்ந்துறங்கு! - **இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**
**கண்ணே** கண்ணுறங்கு! - விளித்தொடர்
**காலையில்** நீயெழும்பு! - வேற்றுமைத்தொடர்
**மாமழை** பெய்கையிலே! - உரிச்சொற்றொடர்
**மாம்பூவே** கண்ணுங்கு! - விளித்தொடர்
**பாடினேன்** தாலாட்டு! - வினைமுற்றுத்தொடர்
**ஆடிஆடி** ஓய்ந்துறங்கு! - அடுக்குத்தொடர்

06. **பழமொழிகளை நிறைவு செய்க.**
- உப்பில்லாப் ______________ உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
- ஒரு பானை ______________ ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- உப்பிட்டவரை ______________ உப்பிட்டவரை உள்ளளவும் நினை
- விருந்தும் ______________ விருந்தும் மருந்தும் மூன்று வேளை
- அளவுக்கு ______________ அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

07. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் - **இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.**

**விடை** - உடுப்ப**தூஉம்**, உண்ப**தூஉம்**
கெடுப்ப**தூஉம்**
கொடுப்ப**தூஉம்** துய்ப்ப**தூஉம்** } **இன்னிசை அளபெடைகள்**

08. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
**அ) கூவிளம் தேமா மலர்** **ஆ)** கூவிளம் புளிமா நாள்
**இ)** தேமா புளிமா காசு **ஈ)** புளிமா தேமா பிறப்பு

09. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு. - குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.
**விடை** - இக்குறளில் பயின்றுவரும் அணி **உவமையணி**
**அணி விளக்கம் -** உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் போல, போன்ற உருபுகள் பெற்று வருவது உவமையணி ஆகும்.
**உவமை** - வேலொடு நின்றான்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**உவமேயம்** - கோலொடு நின்றான்

**உவம உருபு** - போலும்

**விளக்கம்** - அரசன் மக்களை வருத்தி வரிப்பொருள் வாங்குவது, கள்வன் வழிப்போக்கனை அச்சுறுத்திப் 'பொருளைக் கொடு' என வாங்குவதற்கு ஒப்பானது.

## இயல் 4

**01. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

(இலக்கண முறைப்படி பிழை உடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது **வழுவமைதியாகும்.)**

**அ)** அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

**விடை** - கால வழுவமைதி

**ஆ)** "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.

**விடை** - இட வழுவமைதி

**இ)** சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

**விடை** - கால வழுவமைதி

**ஈ)** செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.

**விடை** - கால வழுவமைதி

**02. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு தொடரை மாற்றுக.**

**அ)** தந்தை, "மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா!" என்று சொன்னார். (ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாக மாற்றி எழுதுக)

**விடை** - தாய், "மகளே! நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்து வா" என்று சொன்னாள்.

**ஆ)** அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)

**விடை** - அக்கா நேற்று வீட்டுக்கு <u>வந்தாள்</u>. அக்கா புறப்படும்போது அம்மா <u>வழியனுப்பினாள்.</u>

**இ)** **"**இதோ முடித்துவிடுவேன்**"** என்று செயலை முடிக்கும்முன்பே கூறினார். (வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)

**விடை** - **"**இதோ செயலை <u>முடித்துவிட்டேன்</u>**"** என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார்.

**ஈ)** அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. (படர்க்கையை முன்னிலையாக; முன்னிலையைத் தன்மையாக; தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)

**விடை** - <u>நீ என்னிடமும் அவனிடமும்</u> செய்தியை இன்னும் கூறவில்லை.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**03.** குலசேகர ஆழ்வார் <u>வித்துவக்கோட்டம்மா</u> என்று <u>ஆண் தெய்வத்தை</u> அழைத்துப் பாடுகிறார். <u>பூனையார்</u> பால் சோற்றைக் கண்டதும் <u>வருகிறார்</u> ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே -

**அ)** மரபு வயழவமைதி, திணை வழுவமைதி
**ஆ)** இடவழுவமைதி, மரபு வழுவமைதி
**இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி**
**ஈ)** கால வழுவமைதி, இடவழுவமைதி

**04.** வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியினை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - **இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

**விடை** - வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியினை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் <u>செல்வேன்</u> என்று எதிர்காலத்தில் கூறாமல், உறுதிபற்றிச் <u>செல்கிறேன்</u> என நிகழ்காலத்தில் கூறியமையால் இது காலவழுவமைதி.

**05.** “சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்” என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.- இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

**விடை** -

| | **வழு** | **திருத்தம்** |
|---|---|---|
| 1. | கேட்பான் | கேட்கும் |
| 2. | கத்துவானே தவிர கடிக்க மாட்டான் | குரைக்குமே தவிர கடிக்காது. |

**06. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.**

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா? எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளது போல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு, காதுக் கேட்கும். பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும் நுகர்தல் உணர்வு .இல்லையென்றேக் கூறலாம்.

**விடை** - காகத்திற்கு**க்** காது உண்டா? அதற்கு**க்** காது கேட்குமா? எல்லா**ப்** பறவைகளுக்கும் காது உண்டு. செவி**த்** துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். ம**ற்றப**டி பாலூட்டிகளில் உள்ளது போல் புற**ச்**செவிமடல் இருக்காது. காகத்திற்கு**க்** காது உண்டு, கா<u>து </u>கேட்கும். பறவைகளுக்கு**ப்** பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்<u>சி </u>பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்<u>வு </u> குறைவாகவும் நுகர்தல் உணர்வு .இல்லையென்<u>றே </u>கூறலாம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**07. பின்வரும் பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிடுக.**
**(தேர்வில் பத்தியாகக் கேட்காமல் ஓரிரு வாக்கியங்களாகக் கூட வினவலாம்)**

நேற்றிரவு பெய்த மழை **(எல்லாம்)** தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத்தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம், 'இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்' என்றார். 'இதோ சென்று விட்டேன்' என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக் கொடுத்து, 'என்னடா விளையாட வேண்டுமா?' என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், 'நீயும் இவனும் விளையாடுங்கள்' என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

| வ. எண் | வழு | வழுவமைதி |
|---|---|---|
| 1. | மாடு கத்தியது | மரபு வழுவமைதி |
| 2. | வாழைத்தோப்பு | மரபு வழுவமைதி |
| 3. | குட்டியுடன் நின்றிருந்த மாடு | மரபு வழுவமைதி |
| 4. | இலட்சுமி கூப்பிடுகிறாள் | திணை வழுவமைதி |
| 5. | இதோ சென்றுவிட்டேன் | கால வழுவமைதி |
| 6. | துள்ளிய குட்டியைத் தடவி | மரபு வழுவமைதி |
| 7. | என்னடா, விளையாட வேண்டுமா? | திணை வழுவமைதி |
| 8. | அவனை அவிழ்த்துவிட்டேன் | திணை வழுவமைதி |
| 9. | நீயும் இவனும் விளையாடுங்கள் | திணை வழுவமைதி |
| 10. | நீரைக் குடித்தான் | திணை வழுவமைதி |

**08. கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

1. **இயற்கை - செயற்கை -**
   பாதை தெரியாத <u>இயற்கைக்</u> காடுகளில் பயணம் செய்ய <u>செயற்கைக்</u> கருவிகள் பயன்படுகின்றன.
2. **கொடு - கோடு**
   என் நண்பன் **கொடுத்த** அளவுகோலைக் கொண்டு **கோடு** வரைந்தேன்.
3. **கொள் - கோள்**
   **கோள்களின்** இயக்கம் பற்றி அறிந்து **கொள்.**
4. **சிறு - சீறு**
   **சிறு** பாம்பானாலும் **சீறும்** தன்மையுடையது.
5. **தான் - தாம்**
   தனக்கே**தான்** எல்லாம் என்று எண்ணாமல் எல்லோருக்கும்**தாம்** என்ற எண்ணம் கொள்.
6. **விதி - வீதி**
   ஒருவன் தன் தலை**விதி**யை நொந்து **வீதி**யில் அலைந்து திரிந்தான்.

**09. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.** ( சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் -- **கற்றல்**
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை -- **கரு**
3. கல் சிலை ஆகுமெனில் நெல் ____________ ஆகும். -- **சோறு**
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து -- **எழுத்து**
5. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது -- **பூவில்**

**10. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.**

| வ.எண் | குறிப்பு - எதிர்மறையாக மாற்றுக | |
|---|---|---|
| 1. | மீளாத் துயர் | **மீளும் இன்பம்** |
| 2. | கொடுத்துச் சிவந்த | **கொடுக்காது சிவக்காது** |
| 3. | மறைத்துக் காட்டு | **மறைக்காது காட்டாதே** |
| 4. | அருகில் அமர்க | **தொலைவில் நில்** |
| 5 | பார்த்த படம் | **பார்க்காத படம்** |
| 6. | எழுதாக் கவிதை | **எழுதிய கவிதை** |

**இயல் - 5**

**01. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

- "காமராசர் நகர் எங்கே இருக்கிறது?" "இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது.

  **விடை** - "காமராசர் நகர் எங்கே இருக்கிறது?" - **அறியா வினா**
  "இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது. - **சுட்டு விடை**

- "எனக்கு எழுதித் தருகிறாயா" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது.

  **விடை - வினா எதிர்வினாதல்**

**02. உரையாடலில் இடம்பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

**பாமகள்** : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? --
**விடை - அறியா வினா**

**ஆதிரை** : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன் --
**விடை - நேர் விடை**

**பாமகள்** : அப்படியா? என்ன தலைப்பு? --
**விடை - அறியா வினா**

**ஆதிரை** : கல்வியில் சிறக்கும் தமிழர்! ---
**விடை - நேர் விடை**
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ? ---
**விடை - ஐய வினா**

**பாமகள்** : ஏன் வராமல்? ---
**விடை - வினா எதிர்வினாதல்**

www.Padasalai.Net

**03. பின்வரும் உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.**

இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லைா?

**04.** முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி எழுதுக.

**05. அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**
**(தேர்வில்** வேர்ச்சொல் தனித்தனியாகவும் கேட்கப்படலாம்)
**(இவ்வினாவிற்குரிய விடை அதற்குரிய கட்டங்களில் தடித்த எழுத்துகளுடன்)**

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | **சொன்ன அம்மா** | சொல்லிச் சென்றார் | **அண்ணா! சொல்** | கதையைச் சொன்னார் |
| தா | **அரசர் தந்தார்** | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | **தந்தததைக் கேட்டார்** |
| பார் | துளிர் பார்த்தான் | **பார்த்த துளிர்** | பார்த்துச் சிரித்தான் | **துளிரே பார்** | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | **வந்து நின்றான்** | குழந்தையே வா | **குழந்தையோடு சிரித்தான்** |

**06. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

1. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.
   **விடை - அழகிய குளிர்ந்த** கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

2. மரத்தை வளரப்பது நன்மை பயக்கும்.
   **விடை - நிழல் தரும்** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

3. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
   **விடை - இன்பமும் துன்பமும் நிறைந்த** வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

4. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
   **விடை - நன்னெறிக்** கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

5. குழந்தைகள் தனித்தனியே எழுதித் தரவேண்டும்.
   **விடை - கற்பனைத்திறன் மிக்க** குழந்தைகள் தனித்தனியே எழுதித் தரவேண்டும்.

**07. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் ___1___ யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் ___2___ நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல், புதைத்தல்)

**விடை** - 1. புதையல் 2. புதைத்தல்

2. காட்டு விலங்குகளைச் ___1___ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ___2___ திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

**விடை** - 1. சுடுதல் 2. சுட்டல்

3. காற்றின் மெல்லிய ___1___ பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான ___2___ பூக்களை மாலையாக்குகிறது. (தொடுதல், தொடுத்தல்)

**விடை** - 1. தொடுதல் 2. தொடுத்தல்

4. பசுமையான ___1___ ஐக் ___2___ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

**விடை** - 1. காட்சி 2. காணுதல்

5. பொதுவாழ்வில் ___1___ கூடாது. ___2___ இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

**இயல் 6**

01. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ----

**அ)** முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் **ஆ)** குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

**இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்** **ஈ)** மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**02.** காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். - இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

**முதற்பொருள்**

**நிலம்** - **முல்லை** (காடு காடு சார்ந்த இடம)

**பொழுது** - **பெரும்பொழுது** - கார்காலம் (மழைக்காலம்)

**சிறுபொழுது** - மாலை

**கருப்பொருள்**

**உணவு** - 1. வரகு 2. சாமை

**03.** "கலைஞர், பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.

**04. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

1. உழவர்கள் மலையில் உழுதனர்.
   உழவர்கள் **வயலில்** உழுதனர்.

2. முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
   தாழைப் பூ **(அ)** நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே கடலுக்குச் சென்றனர்.

**05. தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

1. அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்.
   (தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)
   **விடை** - அழைப்புமணி **ஒலித்ததும்** கயல்விழி கதவைத் திறந்தாள்.

2. இன்னாசிரியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கும் கொடுத்தார்.
   (தொடர் சொற்றொடராக மாற்றுக)
   **விடை** - இன்னாசிரியர் புத்தகங்களை **வரிசைப்படுத்தி,** புத்தக அடுக்கங்களில் அடுக்கி **வைத்து,** கேட்பவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

3. கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார். கலைஞர், எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்குக் கொண்டு சென்றார்.
   (கலவைச் சொற்றொடராக மாற்றுக)
   **விடை** - கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு **வாழ்ந்ததால்** எழுத்து **வழியாகவே** தமது எண்ணங்களைக் கடைக்கோடித் **தமிழனுக்கும்** கொண்டு சென்றார்.

4. முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வாரஇதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர். (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)
   **விடை** - **கலைஞர்** முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் **தொடங்கினார். அதனை** வார இதழாக்கினார். **பின்னர்** நாளேடாக்கினார்.

5. ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)
   **விடை** - ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென **நின்றது.** அறையில் **உள்ளவர்களின்** பேச்சு தடைபட்டது.

www.Padasalai.Net

**06. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாய் மாற்றி எழுதுக.**

| **பிறமொழிச் சொல்** | - | **தமிழ்ச்சொல்** | **பிறமொழிச் சொல்** | - | **தமிழ்ச்சொல்** |
|---|---|---|---|---|---|
| கோல்டு பிஸ்கட்டு | - | தங்கக்கட்டி | எக்ஸ்பெரிமெண்ட் | - | பரிசோதனை |
| யூஸ் | - | பயன்படுத்தி | ரிபீட் | - | மறுமுறை |
| ஈக்குவலாய் | - | சமமாய் | ஆன்ஸரை | - | விடையை |
| வெயிட் | - | எடை, காத்திரு | ஆல் தி பெஸ்ட் | - | நல்வாழ்த்துகள் |
| பட் | - | ஆனால் | | | |

## இயல் 7

**01. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**

**அ)** உழவு, மண், ஏர், மாடு **ஆ)** மண், மாடு, ஏர், உழவு

**இ) உழவு, ஏர், மண், மாடு** **ஈ)** ஏர், உழவு, மாடு, மண்

**02.** இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் --

**அ)** நாட்டைக் கைப்பற்றல் **ஆ)** ஆநிரை கவர்தல்

**இ) வலிமையை நிலைநாட்டல்** **ஈ)** கோட்டையை முற்றுகையிடல்

**03.** புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.

**விடை** - **1.** வெட்சி - கரந்தை **2.** வஞ்சி - காஞ்சி

**3.** நொச்சி - உழிஞை **4.** தும்பை - வாகை

**4.** பாடாண் - பொதுவியல் **6.** கைக்கிளை - பெருந்திணை

**04. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை மழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்வர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

**விடை** -

- இருதிணை - இரண்டு + திணை - இரண்டு - உ
- மூவேந்தர் - மூன்று + வேந்தர் - மூன்று - ங (புத்தகத்தில் காண்க)
- முத்தமிழ் - மூன்று + தமிழ் - மூன்று - ங (புத்தகத்தில் காண்க)
- முப்பால் - மூன்று + பால் - மூன்று - ங (புத்தகத்தில் காண்க)
- நாற்றிசை - நான்கு + திசை - நான்கு - ச'
- நானிலம் - நான்கு + நிலம் - நான்கு - ச'
- ஐந்திணை - ஐந்து + திணை - ஐந்து - ரு
- அறுசுவை - ஆறு + சுவை - ஆறு - கூ
- எட்டுத்தொகை - எட்டு + தொகை - எட்டு - அ
- பத்துப்பாட்டு - பத்து + பாட்டு - பத்து - க0

**05. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, கும்பகோணம், திருநெல்வேலி, மன்னார்குடி, மயிலாப்பூர், சைதாப்பேட்டை

| **ஊர்ப்பெயர்** | **மரூஉ** | **ஊர்ப்பெயர்** | - | **மரூஉ** |
|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | புது**கை** | திருச்சிராப்பள்ளி | - | திருச்சி |
| உதகமண்டலம் | உதகை | கோயம்புத்தூர் | - | கோவை |
| நாகப்பட்டினம் | நாகை | புதுச்சேரி | - | புது**வை** |
| கும்பகோணம் | குடந்தை | திருநெல்வேலி | - | நெல்லை |
| மன்னார்குடி | மன்னை | மயிலாப்பூர் | - | மயிலை |
| சைதாப்பேட்டை | சைதை | | | |

## இயல் 8

**01.** சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் --

**அ) அகவற்பா** **ஆ)** வெண்பா **இ)** வஞ்சிப்பா **ஈ)** கலிப்பா

**02.** 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'

**அ)** அடியெதுகையை எடுத்தெழுதுக.

**விடை - அடியெதுகை -** கொள்வோர் - உள்வாய்

**ஆ)** இலக்கணக் குறிப்பு எழுதுக - **1.** கொள்க **2.** குரைக்க

**விடை - 1.** கொள்க **2.** குரைக்க **- வியங்கோள் வினைமுற்று**

**(க, இய, இயர் -** இவற்றில் ஏதேனும் ஒன்று ஈற்றில் வந்தால் அது வியங்கோள் வினைமுற்று)

**03.** குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.

**விடை - குறள் வெண்பாவின் இலக்கணம்**

- **அடி** - இரண்டடிகளில் வரும்.
- **சீர்** - ஈற்றுச் சீர் முச்சீராகவும் முதலடி நாற்சீராகவும் வரும்.
- இயற்சீரும் காய்ச்சீரும் பயின்று வரும்.
- **தளை** - இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் வரும்.
- **ஓசை** - செப்பலோசை பெற்று வரும்.
- **விகற்பம்** - ஒரு விகற்பமாகவோ, இரு விகற்பமாகவோ வரும்.
- **வாய்பாடு** - நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றினால் முடியும்.

**04.** ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

- **அடி** - குறைந்தது மூன்றடி, கூடுதல் பாடுவோரின் உள்ளக்குறிப்பிற்கேற்ப அமையும்.
- **சீர்** - ஈரசைச்சீர்களும், மூவசைச் சீர்களும் பயின்று வரும்.
- **தளை** - நேரொன்றாசிரியத்தளையும், நிரையொன்றாசிரியத்தளையும் வரும். சிறுபான்மை பிறதளைகளும் வரும்.
- **ஓசை** - அகவலோசை பெற்று வரும்.
- **ஈற்றுச்சீர்** - ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ என்ற ஓசையில் முடியும்.

**05.** வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது. - இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

**விடை** - வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும், கலிப்பாவிற்குத் துள்ளல் ஓசையும் உரியன.

**06. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

1. மனக்கோட்டை - கபிலன் தான் ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமென **மனக்கோட்டை** கட்டினான்.
2. கண்ணும் கருத்தும் - பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் **கண்ணும் கருத்துமாய்** வளர்க்கின்றனர்.
3. அள்ளி இறைத்தல் - குழந்தை சோற்றை **அள்ளி இறைத்தது.**
4. ஆறப்போடுதல் - கோபத்தில் எந்த முடிவையும் எடுக்காமல் மனதை **ஆறப்போட்டு** முடிவெடுத்தல் அவசியம்.

**07. சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.**

1. கானடை **2.** வருந்தாமரை **3.** பிண்ணாக்கு **4.** பலகையொலி

**1. கானடை** - 1) கான் **+** நடை - காட்டைச்சேர், காட்டுக்கு நடத்தல்
2) கால் **+** நடை - காலால் நடத்தல்

**2. வருந்தாமரை** - 1) வரும் தாமரை - வருகின்ற தாமரை
2) வரும் **+** தா **+** மரை - வரும் தாவுகின்ற மான்

3) **பிண்ணாக்கு** - 1) எள், வேர்க்கடலை போன்றவற்றை அரைத்து எண்ணெய் எடுத்தபின் மீதம் இருக்கும் பொருள் **பிண்ணாக்கு**
2) பிள் **+** நாக்கு - பிளவுபட்ட நாக்கு

4) **பலகையொலி** 1) பலகை **+** ஒலி - மரப்பலகையின் சத்தம்
2) பல **+** கையொலி - பலர் ஒன்று சேர்ந்து கை தட்டி எழுப்பும் ஒலி

**07.** தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

**விடை -**

| **சொல்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| தஞ்/சம் | நேர் நேர் | தேமா |
| எளி/யர் | நிரை நேர் | புளிமா |
| பகைக்/கு | நிரை நேர் | புளிமா |

**அலகிட்டு வாய்பாடு எழுதுக - ஓர் அறிமுகம்:** **(3 மதிப்பெண்)**

செய்யுளில், சீரை நேரசை, நிரையசை எனப் பிரிக்கலாம். அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து அசைக்கேற்ற வாய்பாடு காணுதல்.

| **நேரசை** | | **நிரையசை** | |
|---|---|---|---|
| **1.** குறில் தனித்து | - **க** | இரு குறில் இணைந்து | - **சில** |
| **2.** குறில் ஒற்றடுத்து | - **கல்** | இரு குறில் இணைந்து ஒற்றடுத்து | - **சிலர்** |
| **3.** நெடில் தனித்து | - பா | குறில் நெடில் இணைந்து | - **பலா** |
| **4.** நெடில் ஒற்றடுத்து | - **பால்** | குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து | - **கடாம்** |

| **ஓரசைச் சீர்** | **ஈரசைச் சீர்** |
|---|---|
| நேர் - நாள் | நேர் நேர் - தேமா |
| நிரை - மலர் | நிரை நேர் - புளிமா |
| நேர்பு - காசு | நிரை நிரை - கருவிளம் |
| நிரைபு- பிறப்பு | நேர் நிரை - கூவிளம் |

| **மூவசைச் சீர்** | |
|---|---|
| நேர் நேர் **நேர்** - தேமாங்**காய்** | நேர் நேர் **நிரை** - தேமாங்**கனி** |
| நிரை நேர் **நேர்** - புளிமாங்**காய்** | நிரை நேர் **நிரை** - புளிமாங்**கனி** |
| நிரை நிரை **நேர்**- கருவிளங்**காய்** | நிரை நிரை **நிரை** - கருவிளங்**கனி** |
| நேர் நிரை **நேர்** - கூவிளங்**காய்** | நேர் நிரை **நிரை** - கூவிளங்**கனி** |

www.Padasalai.Net

**சான்று** - உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| உல/கத் /தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| டொட் /ட | நேர் நேர் | தேமா |
| வொழு / கல் | நிரை நேர் | புளிமா |
| பல /கற் /றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கல் / லா | நேர் நேர் | தேமா |
| அறி / விலா | நிரை நிரை | கருவிளம் |
| தார் | நேர் | நாள் |

**எழுதிப் பழகுக.**

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான ஒழுக்கம்
   உயிரினும் ஓம்பப் படும்.

2. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
   இன்மை புகுத்தி விடும்.

**இயல் 9**

01. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
    **அ)** உவமை **ஆ)** தற்குறிப்பேற்றம் **இ) உருவகம்** **ஈ)** தீவகம்

02. தீவக அணியின் வகைகள் யாவை?
    **விடை** - தீவக அணி **மூன்று** வகைப்படும்.
    1. **முதல் நிலைத்** தீவகம் 2. **இடைநிலைத்** தீவகம் 3. **கடைநிலைத்** தீவகம்

03. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும், அதற்குரிய காரணமும் உண்டு. - இத்தொடரை இருதொடர்களாக்குக.
    **விடை** - நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு.
    அந்தத் தூண்டுதலுக்கும் ஒரு காரணம் உண்டு.

04. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
    பண்பும் பயனும் அது. - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
    **விடை** - இக்குறளில் பயின்று வரும் அணி **நிரல்நிரை அணி.**
    **அணி இலக்கணம்** - பெயர் அல்லது வினையை வரிசைப்பட நிறுத்தி, அதனோடு தொடர்புடையனவற்றை வரிசைப்படக் கூறுவது நிரல்நிரை அணி ஆகும்.
    (அன்பும் - பண்பும்; அறனும் - பயனும்)

**05. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

1. தாமரை இலை நீர் போல - சான்றோர் **தாமரை இலை நீர் போல** வாழ்க்கை வாழ்வர்.
2. மழைமுகம் காணாப் பயிர் போல - **மழை முகம் காணாப் பயிர் போல** தாய்ப் பசுவைக் காணாத கன்று வருந்தியது.
3. கண்ணினைக் காக்கும் இமை போல - என் பெற்றோர் எங்களைக் **கண்ணினைக் காக்கும் இமை போல** காக்கின்றனர்.
4. சிலை மேல் எழுத்து போல - என் தாத்தா கூறிய அறிவுரை **சிலை மேல் எழுத்து போல** பதிந்தது.

**06. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

**விடை**

சேரர்களின் பட்டப் பெயர்களில், 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் **'கொல்லி வெற்பன்',** எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள், **'மலையமான்'** எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**பொருத்துக -**

**இயல் 2**

| | | | |
|---|---|---|---|
| **அ)** கொண்டல் | - | **1.** மேற்கு |
| **ஆ)** கோடை | - | **2.** தெற்கு |
| **இ)** வாடை | - | **3.** கிழக்கு |
| **ஈ)** தென்றல் | - | **4.** வடக்கு |

**அ)** 1, 2, 3, 4 **ஆ) 3, 1, 4, 2** **இ)** 4, 3, 2, 1 **ஈ)** 3, 4, 1, 2

**இயல் 3**

**01. பொருளுக்குரிய அடியைப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| **1.** உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | - | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை | 3 |
| **2.** ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | - | உயிரினும் ஓம்பப்படும் | 1 |
| 3. ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | - | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று | 2 |

**02. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.**

- சிலை - சீலை
  சிற்பி **சிலையைத்** திரைச்**சீலையால்** மறைத்தார்.
- தொடு - தோடு
  உன் காதை அடிக்கடி **தொடு**வதன் மூலம் **தோடு** உள்ளதா எனப் பார்க்கிறாயா?
- மடு - மாடு
  ஆற்றின் **மடு**வில் **மாடு** விழுந்துவிட்டது.
- மலை - மாலை
  அந்தி**மாலை**யில் **மலை**யின் அழகு கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

- வளி - வாளி
  கயிற்றால் கட்டப்பட்ட **வாளி,** வீசும் **வளி**யால் கிணற்றுக்குள் ஆடி அசைந்து சென்றது.
- விடு - வீடு
  பாட்டியிடம் என் கையை **விடு** என்று கூறிவிட்டு வேகமாக **வீடு** வந்து சேர்ந்தேன்.

**திருக்குறளில் அணி விளக்கம்:**

**01.** வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

**அணி** : இக்குறளில் பயின்று வரும் அணி **உவமைஅணி**

**அணி விளக்கம்** : உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைந்து **போல, போன்ற** உவம உருபுகள் வெளிப்படையாக வரும்.

**உவமை** : வேலொடு நின்றான்

**உவமேயம்** : கோலொடு நின்றான்

**உவம உருபு** : போலும்

**விளக்கம்** : அரசன், மக்களை வருத்தி வரிப்பொருள் பெறுவது, கள்வன் வழிப்போக்கரைப் பயமுறுத்திப் 'பொருளைக் கொடு' என வாங்குவது போலாகும்.

**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| 01. துய்ப்பது | -- கற்பது, தருதல் | 02. மேவலால் | -- பொருந்துவதால், பெறுதலால் |
| 03. மயலறுத்து | -- மயங்கச்செய் | 04. ப்ராண ரஸம் | - உயிர்வளி |
| 05. லயத்துடன் | -- சீராக | 06. நனந்தலை உலகம் | - அகன்ற உலகம் |
| 07. நேமி | -- சக்கரம் | 08. கோடு | - மலை |
| 09. கொடுஞ்செலவு | -- விரைவாகச் செல்லுதல் | 10. நறுவீ | - நறுமணமுடைய மலர்கள் |
| 11. தூஉய் | -- தூவி | 12. விரிச்சி | - நற்சொல் |
| 13. சுவல் | -- தோள் | 14. அருகுற | - அருகில் |
| 15. முகமன் | -- ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள் | | |
| 16. அசைஇ | -- இளைப்பாறி | 17. அல்கி | - தங்கி |
| 18. கடும்பு | -- சுற்றம் | 19. நரலும் | - ஒலிக்கும் |
| 20. ஆரி | -- அருமை | 21. படுகர் | - பள்ளம் |
| 22. வயிரியம் | -- கூத்தர் | 23. வேவை | - வெந்தது |
| 24. இறடி | -- தினை | 25. பொம்மல் | - சோறு**02.** |

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| Vowel | - உயிரெழுத்து | Monolingual | - ஒருமொழி |
| Consonant | - மெய்யெழுத்து | Conversation | - உரையாடல் |
| Homograph | - ஒப்பெழுத்து | Discussion | - கலந்துரையாடல் |
| Storm | - புயல் | Land Breeze | - நிலக்காற்று |
| Tornado | - சூறாவளி | Sea breeze | - கடற்காற்று |
| Tempest | - பெருங்காற்று | Whirlwind | - சுழல்காற்று |
| Classical literature | – செவ்விலக்கியம் | Regional literature | – வட்டார இலக்கியம் |
| Epic Literature | -கொப்பிய இலக்கியம் | Folk Literature | - நாட்டுப்புற இலக்கியம் |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



Devotional literature - பக்தி இலக்கியம்
Modern Literature – நவீன இலக்கியம்
Ancient Literature - பண்டைய இலக்கியம்
Emblem – சின்னம்
Thesis -- ஆய்வேடு
Intellectual – அறிவாளர்
Symbolism -- குறியீட்டியல்
Playwright – நாடக ஆசிரியர்
Storyteller – கதைசொல்லி
Screenplay – திரைக்கதை
Aesthetics -- அழகியல், முருகியல்
Consulate -- துணைத்தூதரகம்
Guild -- வணிகக்குழு
Patent -- காப்புரிமை
Irrigation -- பாசனம்
Document -- ஆவணம்
Territory -- நிலப்பகுதி
Belief -- நம்பிக்கை
Philosopher -- மெய்யியலாளர்
Renaissance -- மறுமலர்ச்சி
Revivalism -- மீட்டுருவாக்கம்
Humanism -- மனிதநேயம்
Cabinet -- அமைச்சரவை
Cultural Boundaries -பண்பாட்டு எல்லை
Cultural Values -பண்பாட்டு விழுமியங்கள்

**மொழிபெயர்ப்பு**

**இயல் 1**

01. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. – **Nelson Mandela**

நீங்கள் ஒருவரிடம் அவருக்குத் தெரிந்த மொழியில் பேசினால், அ∴து அவரது அறிவைச் சென்றடையும். ஆனால், அவரது தாய்மொழியில் பேசினால், அ∴து அவரது இதயத்தைச் சென்றடையும். - **நெல்சன் மண்டேலா**

02. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. – **Rita Mac Brown**

மொழி என்பது ஒரு கலாச்சாரத்தை நோக்கி அழைத்துச் செல்கின்ற வழியாகும். அது, அந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள், எங்கே செல்கிறார்கள் என்பதை உங்களுக்குப் புலப்படுத்தும் - **ரீட்டா மாக் ப்ரவுன்**

**03.** Education is what remains after one has forgotten what one has learned in school.
- **Albert Einstein**

பள்ளியில் கல்வி கற்றபின் எது நம் நினைவில் நிற்கிறதோ அதுவே கல்வியாகும்.
- **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

**04.** Tomorrow is often the busiest day of the week. **- Spanish Proverb**

நாளையே இந்த வாரத்தின் பரபரப்பான நாள் - **ஸ்பானிஷ் பழமொழி**

**05.** It is during our darkest moments that we must focus to see the light. **– Aristotle**

நம் வாழ்க்கையில் கடினமான இருளடைந்த பகுதியில் நம் அகத்தின் ஒளியை நாம் காண வேண்டும். - **அரிஸ்டாடில்**

**06.** Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts.
- **Winston Churchill**

வெற்றி என்பது இறுதியன்று; தோல்வி என்பதும் இறப்பன்று. அவற்றைத் தொடர்ந்து முன்னேறும் துணிவையே நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.
- **வின்ஸ்டன் சர்ச்சில்**

**மற்ற மொழிபெயர்ப்புப் பகுதிகளை பாடப்புத்தகத்தின் துணைகொண்டு கற்கவும்.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

**நினைவில் கொள்ள வேண்டியவை மதிப்பெண் - 5**

மாணவரின் கவிதை நயத்தைச் சுவைக்கும் ஆற்றலைச் சோதிப்பதே இப்பகுதியின் நோக்கமாகும். இப்பகுதியில் பின்வரும் தலைப்புகள் அமையக்கூடும். வினாத்தாளில் இடம்பெறும் பாடலின் தன்மைக்கேற்ப இத்தலைப்புகள் அமையக்கூடும். சில தலைப்புகள் விடுபடுதலும் உண்டு. தேர்வில் கேட்கப்படும் வினாவிற்கு ஏற்ப தலைப்புகளின் விளக்கங்களை அப்படியே எழுதி பாடலுக்குரிய சான்றுகளை மட்டும் மாற்றி எழுத வேண்டும்.

1. **ஆசிரியர் குறிப்பு** - பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் __________ இவரும் ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் கற்போருக்கு எழுச்சியையும், விழிப்புணர்வையும் தரக்கூடியதாக அமைந்துள்ளது. (கோடிட்ட இடத்தில் கவிஞரின் பெயரை எழுத வேண்டும்.)

(**1. கா.நமச்சிவாயர் 2. காளமேகப் புலவர் 3. பாரதியார் 4. வள்ளலார்**
இவர்களது பாடல்கள் மட்டுமே நமக்குப் பாடப்பகுதியாக வந்துள்ளது.)

2. **திரண்ட கருத்து** : செய்யுளின் முழுவிளக்கத்தையும் **பத்தி வடிவில்** எழுத வேண்டும்.

3. **மையக் கருத்து** : செய்யுளின் **உட்கருத்தைப்** புரிந்து கொண்டு ஓரிரு வரிகளில் எழுத வேண்டும்.

4. **தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று** :

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று** :

**இயைபு** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது **இயைபு** ஆகும்.
**சான்று** :

**முரண்** : செய்யுளில் **எதிர்ச்சொற்களாக** வருவதே **முரண்** எனப்படும்.
**சான்று** :

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தநயம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**தலைப்பு** : பாடலுக்கேற்ற தலைப்பு எழுத வேண்டும்.

--- --- ---

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



1. தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

**கா.நமச்சிவாயர்**

1. **ஆசிரியர் குறிப்பு** - பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **கா.நமச்சிவாயரும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் கற்போருக்கு எழுச்சியையும், விழிப்புணர்வையும் தரக்கூடியதாக அமைந்துள்ளது.

**திரண்ட கருத்து** - தேனைவிட இனிமையான செந்தமிழே! தென்தமிழகம் சிறப்புற விளங்கும் தென்மொழியே! உடலினும் உணர்விலும் சிறந்து விளங்கும் ஒளிபொருந்திய தமிழே! வானைக்காட்டிலும் ஓங்கிய வளமான மொழியே! மக்களுக்கு இரு கண்களாய் விளங்கும் மொழியே! தனித்து இயங்குகின்ற தனித்தமிழ் மொழியே! மென்மேலும் தழைத்து இனிது ஓங்கி வளர்வாயாக!

**மையக் கருத்து** - தமிழ்மொழியின் சிறப்பினை ஆசிரியர் அழகுற எடுத்துக் கூறியுள்ளார்.

**தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று** : **தே**னினும் - **தெ**ன்னாடு

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று** : தே**னி**னும் - ஊ**னி**னும்

**இயைபு** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது **இயைபு** ஆகும்.
**சான்று** : மொழியே - மொழியே

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தநயம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**தலைப்பு** : **அன்னைத் தமிழே!**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2.** "கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்"

**- காளமேகப் புலவர்**

1. **ஆசிரியர் குறிப்பு** - பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **காளமேகப் புலவரும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் கற்போருக்கு எழுச்சியையும், விழிப்புணர்வையும் தரக்கூடியதாக அமைந்துள்ளது.

**திரண்ட கருத்து** - ஒலிக்கின்ற அலையோசை உடைய கடலால் சூழப்பட்ட ஊர் நாகப்பட்டினம். அங்குள்ள காத்தான் கத்திரத்திற்கு, சூரியன் மறையும் மாலை நேரத்தின் போது அரிசி வரும். அதனைக் குத்திப் புடைத்து உலையிலிட்டு, உண்ணுபவருக்கு உணவாய் வழங்கும் போது ஊர் அடங்கிவிடும. ஓர் அகப்பை அன்னம் இலையில் இடும் போது வெள்ளி தோன்றிட பொழுது விடியும்.

**மையக் கருத்து -** நாகப்பட்டினத்தின் மக்களின் வாழ்க்கையை புலவர் அழகுற எடுத்துக் கூறியுள்ளார்.

**தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று : அ**த்தமிக்கும் - **அ**ரிசி

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று : இலை - உலை**

**இயைபு** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது **இயைபு** ஆகும்.
**சான்று** : அன்னம் - எழும்

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தநயம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**தலைப்பு : நாகையின் அந்திமாலை**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



3. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர்வண்டு
பாடுவதும் வியப்போ?

- **பாரதியார்**

1. **ஆசிரியர் குறிப்பு** - பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **மகாகவி பாரதியாரும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் கற்போருக்கு எழுச்சியையும், விழிப்புணர்வையும் தரக்கூடியதாக அமைந்துள்ளது.

**திரண்ட கருத்து** - வானத்திலே குளிர்ந்த நிலவையும் காற்றையும் ஒழுங்குபட அமைத்து உலா வரச்செய்த அழகினைப் பருகி, அமுதம் குடித்ததைப் போல மயங்கி நின்றோம். மனம் என்னும் பறவையை எங்கும் பறக்கச்செய்து, இவை போன்று இனிய காட்சிகளைக் கண்டு மகிழ்ந்திடுவோம். ஒரு வண்டி நிறைய உள்ள இனிய பலாச்சுளையின் இனிமையை நாடி ஒரு வண்டு ரீங்காரம் இசைத்துப் பாடுவது வியப்பான செயலோ?

**மையக் கருத்து** - இயற்கையின் அழகைப் பாரதியார் இப்பாடலில் அழகுற எடுத்துக் கூறுகின்றார்.

**தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று** : குலாவும் - குடித்தொரு

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று** : நிலா - பலா

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தநயம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**தலைப்பு** : **இயற்கையின் அழகு**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் 8**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

**- வள்ளலார்**

1. **ஆசிரியர் குறிப்பு** - பெயர் சொன்னாலே பெருமிதப்படக் கூடிய மாபெரும் கவிஞர்களுள் **வள்ளலாரும்** ஒருவர். இவரது பாடல்கள் அனைத்தும் கற்போருக்கு பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்ற மனிதநேயத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இப்பாடலில் இறைவனின் அருளை வேண்டுகின்றார்.

2. **திரண்ட கருத்து** : கடும்கோடையிா் தமக்குத் தங்கி இளைப்பாற வாய்த்த குளிர்ச்சி பொருந்திய மரமாகவும், அதன் நிழலாகவும், நிழலில் அமர்ந்து உண்ணும் கனி போலவும், ஊற்றெடுத்து வரும் நீர் போலவும், நீரின் நடுவில் மலர்ந்த மணமிகு மலர் போலவும், மேடையில் வீசுகின்ற மென்காற்றின் சுகமாகவும், சுகத்தின் பயனாகவும் இறைவன் விளங்குவதாகக் கூறுகிறார். மேலும் அடியவனாகத் தம்மை ஏற்றுக் கொண்ட இறைவனாகிய தலைவன், தாம் தொடுத்த இப்பாமாலையைச் சூடி அருள வேண்டும் என்று வேண்டுகின்றார்.

3. **மையக் கருத்து** : வள்ளலார் இறைவனின் அருளை வேண்டி, தாம் தொடுத்த பாமாலையை சூடிக் கொள்ளும்படி வேண்டுகின்றார்.

4. **தொடை நயம்** : தொடுக்கப்படுவது தொடை. செய்யுளில் **மோனை, எதுகை, முரண், இயைபு** ஆகியன அமையும் முறையைக் குறிப்பது தொடை நயம் ஆகும்.

**மோனை** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **முதலெழுத்து** ஒன்றி வருவது **மோனை** ஆகும்.
**சான்று : கோ**டை - **கொ**ள்ளும்

**எதுகை** :செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது **எதுகை** ஆகும்.
**சான்று** : கோ**டை** - ஓ**டை** - மே**டை** - ஆ**டை**

**இயைபு** : செய்யுளில் சீர் அல்லது அடிதோறும் **இறுதி எழுத்தோ** அல்லது **இறுதிச் சீரோ** ஒன்றி வருவது **இயைபு** ஆகும்.
**சான்று** : கனி**யே** - மல**ரே**

**சந்தம்** : செய்யுளுக்கு அழகு சேர்ப்பது **சந்தநயம்.** இப்பாடலை சந்த நயத்துடன் பாடி மகிழலாம்.

**தலைப்பு : பாமாலை**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **மதிப்பெண் - 5**

**இயல் 1**



**திறவுகோல்**

அறிவைப் பூட்டி வைக்காதே!
புத்தகத் திறவுகோலால்
அறிவை விரிவுசெய்
அறியாமையை விலக்கு
பொன்னான நேரத்தை உனதாக்கு
அறம் பொருள் இன்பம் கற்றிடு
இரு கண்களைத் திறந்தே
நல்ல நூல்களைப் படித்திடு

**இயல் 2**



**உயிர் வளி**

மூச்சுக் காற்றை முதுகில் சுமக்கும் காலம்
முரட்டுத்தனமாய்க் காட்டை அழித்தோம்
நுரையீரல் அடைக்கும் காற்றை
மரம்தானே தர வேண்டும்
மாசற்ற காற்றை உருவாக்குவோம்
இயற்கை வளத்தைக் காப்போம்


**இயல் 3**



**மகிழ்வித்து மகிழ்**

இல்லத்தில் வறுமை இருக்கலாம்
உள்ளத்தில் வறுமை கூடாது.
அள்ளிக் கொடுக்கும் இடத்தில்
கிள்ளிக் கொடுங்கள் அதுபோதும்
சொல்லிக் கொடுப்போம் தலைமுறைக்கு
மற்றவரை மகிழ்விப்பதில் சுகம்என்று.

**இயல் 4**



**மூக்கணாங்கயிறு**


கைபேசி போட்டது மூக்கணாங்கயிறு
வெண்திரை பார்த்தே ஒழியுது காலம்
நிமிர்ந்த நடை என்னாயிற்று?
உறவும் நட்பும் துறந்தாயிற்று.
எல்லாம் அறியலாம் இதிலென்றாய்
எல்லாம் மறந்ததுதான் உண்மை.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் 5**



**மரம் பேசினால் ... ..**

மனிதா! மனிதா!
எனது அருமை தெரியா மனிதா!
காட்டினைப் பாதுகாக்க பாடமெடுக்கிறாய்
"வெட்டிவிட்டு என்மீது அமர்ந்தே என்ன கேட்கிறாய்?
பசுமையும் குளிர்ச்சியும் இல்லா சூழலைப் பார்!
மலையும் காய்ந்தது; மழை மேகமும் கலைந்தது;
இன்னும் பாடம் நடத்தி என்ன பயன்?
ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமோ?
என்னை வளர்த்தால் உயிர்க் காற்றாய் வந்து
நன்றி செலுத்திடுவேன்!

**இயல் 6**



**ஒயிலாட்டம்**

தோளில் மாட்டி உருமிமேளம் ஒலிக்க
தோரணையாக மெட்டு இயற்றி
பார்ப்பவர்களை வியக்க வைக்க
பரவலாக ஆட்டம் துவங்க
ஒன்று போல் ஆடி
ஒற்றுமையை நிலைநாட்டி
வண்ணத் துணிகளை ஆட்டி
வந்தவர் கவலைகளை ஓட்டி
ஆடவர் ஆடும் ஆட்டம்
இதுவே ஒயிலாட்டம்

**இயல் 7**



**பசிப்பிணி மருத்துவன்**

ஏர் சுமந்து நிற்கும் விவசாயி
பார் முழுதும் பசி தீர
வியர்வை நிலத்தில் சிந்திட
நிலம் உழும் உழவர்
பலர் பசி தீர்த்தாலும்
தன் பசி தீர வழியறியா
அவனே இந்தியாவின் முதுகெலும்பு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இயல் 8**



**வலி உணர்**

கொடுக்க நினைக்குது மனம்
அதைத் தடுக்க நினைக்குது ஒரு கரம்
நம்மை நோக்கி நீளும் கைகள்
அதற்கு மட்டுமே தெரியும் அதன் வலிகள்
கொடுத்தவன் வீழ்ந்ததில்லை
தடுத்தவன் வாழ்ந்ததில்லை.

**இயல் 9**




**சுய விளம்பர மோகம்**

படம் எடு படம் எடு
நல்லனவற்றைப் படம் எடு
அறிந்திடு அறிந்திடு
நாளும் உலகை அறிந்திடு
அறம்செய விரும்பிடு
அதைப் படம்எடுப்பதைத் தவிர்த்திடு
உதவும் குணத்துடன் இருந்திடு
கொடுத்ததை அன்றே மறந்திடு.

**தமிழ் பாடப்புத்தகத்தில் உள்ள பிற வினாக்களையும் படிக்க வேண்டும்.**

**நல்லதை நினை! நல்லதைச் செய்! நல்லதே நடக்கும்!**

**THINK GOOD! DO GOOD! GET GOOD!**



www.Padasalai.Net